# மெய்யான விடுதலையின் சிறந்த வார்த்தை




## 2.1 பாவத்தின் சம்பளம்

**வேத வசனம்:** **பாவத்தின் சம்பளம் மரணம். தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.**

*ரோமர் 6:23*

**அறிக்கை:** **எல்லோரும் பாவம் செய்துவிட்டனர். பாவத்தின் சம்பளம் மரணம்**

**சத்தியம்:** எல்லா மக்களும் பாவம் செய்து விட்டனர். எனினும் தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து பாவமற்றவரானபடியால் மனிதராகிய நாம் பெறவேண்டிய தண்டனைகளை அவர் ஏற்றுக்கொண்டு சிலுவையில் மரித்தார்.



### வேத பகுதி: ஆதியாகமம் 6:5-8

**பாடம்**

**1. பாவ வாழ்க்கை:** பாவம் என்பது திருடுவதும் மனிதருக்குத் துன்பம் தருவதுமான வெறும் செயல்கள் மட்டும் அல்ல. கர்த்தரைப் பொறுத்தமட்டில் அவரைக் கனவீனமாக்குவதும், பெற்றோரை வருந்தச் செய்வதும், மனம்போன போக்கில் வாழுவதும் பாவம் செய்வது ஆகும். இறுதி நாட்களைக்குறித்து வேதம் விளக்குகிறது. "மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்". (2 திமொத்தேயு 3:2-4)

**2. பாவத்தின் விளைவு:** பாவம் மனிதரை மட்டும் அல்ல, தேவனையும் வருந்தச் செய்கிறது. பாவம் தேவனை விட்டு மனிதரை பிரிக்கவும் செய்கிறது. தேவன் பரிசுத்தமும் நீதியும் உடையவர் என்பதால் அவர் பாவத்தை வெறுக்கிறார். தொடர்ந்து பாவம் செய்துகொண்டிருப்பவர்கள் மிக பயங்கரமான விளைவை சந்திப்பார்கள். ஏனெனில் பாவத்தின் சம்பளம் மரணம். (ரோமர் 6:23)

**3. மனிதரால் தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ள முடியாது:** "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை. உணர்வுள்ளவன் இல்லை. தேவனைத் தேடுகிறவன் இல்லை"என்று வேதம் சொல்லுகிறது. அனைவருக்குள்ளும் இயற்கையாகவே பாவ சுபாவம் உண்டு. ஒருவராலும் இந்த பாவ சுபாவத்திலிருந்து அவர்களாகவே விடுதலைப்பெற இயலாது. (ரோமர் 3:10,11, 7:18,19)

**4. இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம்:** கர்த்தர் இயேசு உலகில் உள்ள அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களின் பாவங்களுக்காக சிலுவையில் மரித்தார். அவருடைய இரத்தம், மனிதர்கள் தேவனுடைய மன்னிப்பையும், கழுவப்படுதலையும் பெற்றுக்கொள்ளும்படிச் செய்கிறது. தேவனுடைய குமாரனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நாம் மீட்கப்பட்டவர்கள். பாவ மன்னிப்பையும் பெற்றுக்கொண்டவர்கள். "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபேசியர் 1:7)

**முடிவுரை:** அனைவரும் பாவம் செய்தவர்கள். அதோடு பாவத்தின் சம்பளம் மரணம். இன்று நாம் நம்முடைய பாவங்களை தேவனிடத்தில் அறிக்கையிட்டு பாவத்திலிருந்தும் துர்குணத்திலிருந்தும் விடுபட போகிறோம்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.